# இஸ்திஸ்ஃகா (மழைக்கான) தொழுகையின் துஆ

1 ஹஜ்ரத் ஆயிஷா (ர) அவர்கள் அறிவிக்கிறார்கள், மக்கள் இறைத்தூதர் ﷺ அவர்களிடம் பஞ்சம் ஏற்பட்டுள்ளதுபற்றி முறையிட்டார்கள், அதற்குஅவர்கள் ﷺ முஸல்லாவுடன் மிம்பர் அமைக்குமாறு கட்டளை யிட்டார்கள், அதன்பின் அவர்கள் ﷺ அதற்காக ஒருநாளையும் நிர்ணயித் தார்கள். அன்று சூரியன் உதயமானதும் மக்கள் தத்தம் வீடுகளிலிருந்து வெளியே வந்தனர். இறைத்தூதர் ﷺ அவர்கள் மிம்பர்மீது ஏறி அல் லாஹ்வைப் புகழ்ந்து தக்பீர் கூறியபின் இந்த துஆவை ஓதினார்கள்:

الْحَمْدُ للهِ رَبِ الْعَالَمِينَ الرَّحْمٰنِ الرَّحِيمِ مٰلِكِ يوْمِ الدِّينِ، لاَ إِلٰهَ إِلاَّ اللهُ، يَفْعَلُ مَا يُرِيْدُ، اَللّٰهُمَّ أَنْتَ اللهُ ، لَا إِلٰهَ إِلاَّ أَنْتَ الْغَنِيُّ وَنَحْنُ الْفُقَرَاء، أَنْزِلْ عَلَيْنَا الْغَيْثَ، وَاجْعَلْ مَا أَنْزَلْتَ لَنَا قُوَّة وَبَلَاغاً إِلَى حِين

*பொருள்: புகழ் அனைத்தும் அகிலங்களின் அதிபதியும் இரட்சகனு மாகிய அல்லாஹ்வுக்கே தகும், அவன் அருளாளனும் கருணையாள னுமாவான், தீர்ப்பு நாளின் அதிபதி. அல்லாஹ்வைத்தவிர வணக்கத் திற்குரியவன் வேறில்லை, அவன் நினைத்ததைச் செய்யும் ஆற்றலும் அதிகாரமுமுடையவன். எங்கள் இறைவனே. நீதான் அல்லாஹ், எந் தத்தேவையுமற்றவன், நாங்கள் தேவைகளையுடைவர்கள். எங்களுக் காக மழையைப் பொழியச் செய்வாயாக. மேலும், நீ எங்களுக்காக அருள்கூர்ந்து இறக்கியருளியவற்றைக்கொண்டு எங்களுக்கு சக்தியை யும் தொடர்ந்த ஆதாரமாகவும் ஆக்கிவைப்பாயாக* (அபூ தாவூத்)

2 ஹஜ்ரத் ஆயிஷா (ர) அவர்கள் அறிவிக்கிறார்கள், இறைத்தூதர் ﷺ அவர்கள் மழைபொழிவதைக் காணும்போது

اَللّٰهُمَّ صَيِّبًا نَافِعا

*பொருள்: எங்கள் இறைவனே, இந்த மழையை எங்களுக்காகப் பயனுள்ளதாக ஆக்கிவைப்பாயாக* (புக்ஹாரி).

3 ஹஜ்ரத் அம்ரு பின் ஷுஐப் (ர) அவர்கள் தன்னுடைய தந்தை மற்றும் பாட்டனார் கூறக்கேட்டதாக அறிவிக்கிறார்கள், இறைத்தூதர் ﷺ அவர் கள் மழைக்காக கீழ்க்காணும் துஆவை ஓதுவார்கள்:

www.uzaifalahi.com

**أللّٰهمَّ أسْقِ عِبَادَكَ، وَبَهِيمَتَكَ، وَانْشرْ رَحْمَتَكَ، وَأَحْيِ بَلَدَكَ الْمَيِّتَ**

பொருள்: *எங்கள் இறைவனே, உன் அடியார்களுக்கும் கால்நடைகளுக்கும் குடிக்கத் தண்ணீர் அளிப்பாயாக. அனைவர்மீதும் கருணை புரிவாயாக, செத்துக் கிடக்கும் நகரங்களை இதனைக்கொண்டு உயிர்பெறச் செய்வாயாக (அபூ தாவூத்).*

* * *

www.uzairfalahi.com